# 2

# அல் அஸ்மாஉல் ஹுஸ்னா

ஈமானில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையே முதன்மையானது. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதற்கு அவனைப் பற்றி அறிதல் வேண்டும். அல்லாஹ் பற்றி மிகச் சரியாக அறிந்து கொள்வதற்கு அவனது திருநாமங்களும் (அஸ்மாஉல் ஹுஸ்னா) அவனது பண்புகளும் (ஸிபாத்) துணைபுரிகின்றன.

அல்லாஹ்வுக்கு அழகுத் திருநாமங்கள் உள்ளன என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

''அல்லாஹ் அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு நாயன் இல்லை. அவனுக்கு அழகான திருநாமங்கள் இருக்கின்றன.'' (20: 8)

''நபியே நீர் கூறுவீராக, நீங்கள் அல்லாஹ் என்றழையுங்கள். அல்லது அர்ரஹ்மான் என்றழையுங்கள் (இவ்விரண்டில்) எப்பெயர்கொண்டு நீங்கள் அழைத்தபோதிலும் அவனுக்கு இன்னும் பல அழகான திருநாமங்கள் உள்ளன.'' (17: 110)

''அந்த அல்லாஹ்தான் படைப்பவன். (அவனே) படைப்புகளை ஒழுங்கு செய்பவன். (அவனே) படைப்புகளின் உருவத்தையும் அமைப்பவன். அவனுக்கு அழகான பல திருநாமங்கள் இருக்கின்றன. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனையே துதி செய்கின்றன. அவனே (அனைவரையும்) படைத்தவன். ஞானமுடையவன்.'' (59: 24)


அல்லாஹ்வுக்குரிய அஸ்மாஉல் ஹுஸ்னாக்களின் எண்ணிக்கை பற்றி ஹதீஸில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

''அல்லாஹ்வுக்கு 99 அழகுத் திருநாமங்கள் உள்ளன. இவற்றை யார் மனனமிடு கின்றாரோ அவர் சுவனத்தில் நுழைவார்'' (புஹாரி)

அஸ்மாஉல் ஹுஸ்னாக்களை மனனமிடுவது மாத்திரமன்றி அவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தந்தபடி நடைமுறை வாழ்வில் பின்பற்றி ஒழுகவும் வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது நாளாந்த வாழ்வில் துஆக்களிலும் திக்ர்களிலும் அல்லாஹ்வின் திருநாமங்களை அதிகமதிகம் சேர்த்துக்கொண்டுள்ளார்கள்.

''இறைவா உனது திருப்பெயரால் நான் தூங்கச் செல்கிறேன். உனது திருப்பெயரால் தான் நான் உயிர் வாழ்கிறேன்.'' (முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உறங்கத் தயாரானபோது பிரார்த்தித்துள்ளார்கள்.

அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் 99 உம் திர்மிதி என்ற ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இனி அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களை நோக்குவோம்.


بسم الله الرحمن الرحيم
هو الله الذي لا إله إلا هو
الرحمن
الرحيم
الملك
القدوس
السلام
المؤمن
المهيمن
العزيز
الجبار
المتكبر
الخالق
البارئ
المصور
الغفار
القهار
الوهاب
الرزاق
الفتاح
العليم
القابض
الباسط
الخافض
الرافع
المعز
المذل
السميع
البصير
الحكم
العدل
اللطيف
الخبير
الحليم
العظيم
الغفور
الشكور
العلي
الكبير
الحفيظ
المقيت
الحسيب
الجليل
الكريم
الرقيب
المجيب
الواسع



الحكيم جل جلاله
الودود جل جلاله
المجيد جل جلاله
الباعث جل جلاله
الشهيد جل جلاله
الحق جل جلاله
الوكيل جل جلاله
القوى جل جلاله
المتين جل جلاله
الولى جل جلاله
الحميد جل جلاله
المحصى جل جلاله
المبدئ جل جلاله
المعيد جل جلاله
المحيى جل جلاله
المميت جل جلاله
الحى جل جلاله
القيوم جل جلاله
الواجد جل جلاله
الماجد جل جلاله
الواحد جل جلاله
الاحد جل جلاله
الصمد جل جلاله
القادر جل جلاله
المقتدر جل جلاله
المقدم جل جلاله
المؤخر جل جلاله
الاول جل جلاله
الاخر جل جلاله
الظاهر جل جلاله
الباطن جل جلاله
الوالى جل جلاله
المتعال جل جلاله
البر جل جلاله
التواب جل جلاله
المنتقم جل جلاله
العفو جل جلاله
الرؤف جل جلاله
مالك الملك جل جلاله
ذو الجلال والاكرام جل جلاله
المقسط جل جلاله
الجامع جل جلاله
الغنى جل جلاله
المغنى جل جلاله
المانع جل جلاله
الضار جل جلاله
النافع جل جلاله
النور جل جلاله
الهادى جل جلاله
البديع جل جلاله
الباقى جل جلاله
الوارث جل جلاله
الرشيد جل جلاله
الصبور جل جلاله

*இந்த தொன்னூற்றொன்பது திருநாமங்களும் அல்லாஹ் என்ற தனித்துவமான திருநாமத்தின் பண்புகளாகவே கூறப்பட்டுள்ளன. ஆகவேதான் அல்லாஹ் என்ற திருநாமம் 'லப்ளுள் ஜலாலாஹ்' என அழைக்கப்படுகின்றது.*

*அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் ஊடாக அல்லாஹ்வின் அறிவு, ஆற்றல், அதிகாரம், உயர் குணங்கள் மற்றும் வல்லமை போன்ற அனைத்திலும் அவன் ஒப்பற்றவன் என்பது தெளிவாகின்றது. யாரையும் அவனுக்கு இணையாக்க முடியாது என்பது முஃமினின் உள்ளத்தில் ஆழமாகப் பதிதல் வேண்டும். அவ்வாறு அல்லாஹ்வின் படைப்புகளை அவன் பண்புகளுக்கு நிகராக்கினால் அது ஷிர்க் ஆக அமைந்துவிடும்.*

*அகீதாத்துறை அறிஞர்கள் அஸ்மாஉல் ஹுஸ்னாக்களை அவற்றுக்கான பொருளை அடிப்படையாகக்கொண்டு பின்வருமாறு வகைப்படுத்துவர். அவற்றுள் சில வருமாறு:*

1. *அல்லாஹ்வின் படைப்பாற்றலுடன் தொடர்பானவை*
2. *அல்லாஹ்வின் அன்புடன் தொடர்பானவை*
3. *அல்லாஹ்வின் வல்லமை, சக்தியுடன் தொடர்பானவை*
4. *அல்லாஹ்வின் அறிவுடன் தொடர்பானவை*

**'அல்லாஹ்வுக்கு மிக்க அழகிய பெயர்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை (உதவி தேடி) அழையுங்கள். அவனுடைய திருப் பெயர்களில் தவறிழைப்பவர்களை நீங்கள் விட்டுவிடுங்கள். இவர்கள் தங்கள் செயலுக்குத்தக்க கூலியை விரைவில் அடைவார்கள்.'' (7: 180)**

*அஸ்மாஉல் ஹுஸ்னாவில் வரும் அல்லாஹ்வின் பண்புகளுடன் ஒப்பிடுகையில் அவனால் படைக்கப்பட்ட மனிதன் மிகவும் பலவீனமானவன் என்பது புலனாகின்றது. இதனால் மனிதன் தனது வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படும்போது அவன் வல்லமை படைத்த அல்லாஹ்வை நாட வேண்டியுள்ளான். அவனிடம் உதவியும் பாதுகாப்பும் தேட வேண்டியவனாகவுள்ளான். இத்தகைய சந்தர்ப்பங்களில் முஃமின்கள் தமது துஆக்களில் அஸ்மாஉல் ஹுஸ்னாக்களைப் பயன்படுத்துவது சாலச் சிறந்ததாகும்.*

*அஸ்மாஉல் ஹுஸ்னாக்களின் ஊடாக அல்லாஹ்வின் மகத்துவத்தை அறிந்து ஈமானைப் பரிபூரணப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அவற்றை மனனமிட்டு தினமும் பொருளறிந்து மொழிவதன் மூலம் அவனை நெருங்கவும் முயல வேண்டும்.*

**பயிற்சி**

*(அ) சரி பிழை கூறுக.*

1. அஸ்மாஉல் ஹுஸ்னா என்றால் அல்லாஹ்வின் செயற்பாடுகள் என்பது பொருளாகும். ( )
2. அல்லாஹ்வுக்கு 99 அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் உள்ளன. ( )
3. அஸ்மாஉல் ஹுஸ்னாவில் வரும் அல்லாஹ் என்ற திருநாமம் தனித்துவமானதாகும். ( )
4. மனிதர்கள் தாங்கள் விரும்பியவாறு பிழையான பெயர்களாலும் அல்லாஹ்வை அழைக்கலாம். ( )
5. 'அர்ரஹ்மான்' என்பது அல்லாஹ்வின் அறிவுடன் தொடர்பான பண்பைக் காட்டும். ( )

*(ஆ) சுருக்கமான விடை தருக.*

1. அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் மூலமே அல்லாஹ்வை அழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஓர் அல்குர்ஆன் வசனத்தைத் தருக.
2. 'லப்ளுள் ஜலாலாஹ்' என அழைக்கப்படும் அழகுத் திருநாமம் எது?
3. அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் 99ஐயும் குறிப்பிட்டு வந்துள்ள ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ள கிரந்தம் எது?
4. அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் பத்தை அரபியில் எழுதி, அவற்றின் பொருளையும் எழுதிக் காட்டுக.
5. ஸூரா பாத்திஹாவில் இடம்பெறும் அன்புடன் தொடர்பான அல்லாஹ்வின் இரு அஸ்மாஉல் ஹுஸ்னாக்களும் எவை?